# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதிவிசேஷமானது

අංක 14,478 — 1965 අගෝස්තු 10 වැනි අඟහරුවාද — 1965.8.10

14,478 ம் இலக்கம் — 1965 ம் ஆண்டு ஒகத்து மாதம் 10 ந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

(173 ம் அத்தியாயமான) விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவின் 7 ம் உப பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு கீழ்க்காணும் அட்டவணையிலுள்ள கட்டளைகள் என்னால் அங்கீகரிக்கப்பட்டதென இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

கொழும்பு,
1965 ம் ௵ ஆகஸ்ட் ௴ 9 ந் ௳.

ඇම්. ඩී. බණ්ඩා,
விவசாய, உணவுப் பகுதி அமைச்சர்.

அட்டவணை

| கட்டளையிட்ட தேதி | கட்டளையிடுவதற்கு யாரால் அதிகாரம் வழங்கப்பட்டது | கட்டளை எப்பொருளுக்கானது | எவ்வர்த்தமானப் பத்திரிகையில் கட்டளை பிரசுரிக்கப்பட்டது |
|---|---|---|---|
| 30.6.1965 .. | பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), வதுளை மாவட்டம் | அரிசி .. | 7.7.1965 ந் தேதியைக் கொண்ட 14,443 ம் இலக்கம் |
| ஷை .. | ஷை .. | கோதுமை மா .. | ஷை |
| ஷை .. | ஷை .. | மைசூர்ப்பருப்பு .. | ஷை |
| ஷை .. | ஷை .. | பழுப்புச் சீனி .. | ஷை |
| 17.7.1965 .. | பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), அம்பாறை மாவட்டம் | உப உணவுப் பொருள்கள் | 22.7.1965 ந் தேதியைக் கொண்ட 14,457 ம் இலக்கம் |
| ஷை .. | ஷை .. | சர்க்கரை .. | ஷை |
| ஷை .. | ஷை .. | மைசூர்ப்பருப்பு .. | ஷை |
| 15.7.1965 .. | பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), வதுளை மாவட்டம் | ஷை .. | 24.7.1965 ந் தேதியைக் கொண்ட 14,460 ம் இலக்கம் |
| 23.7.1965 .. | உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), மாத்தளை மாவட்டம் | ஷை .. | 29.7.1965 ந் தேதியைக் கொண்ட 14,463 ம் இலக்கம் |

8-502.

### இலங்கை பிரமாண விதித்தல் சட்ட நிருபணத்தின் 171 ம் அத்தியாய உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டம்

கட்டளை இலக்கம் 236

இலங்கை பிரமாண விதித்தல் சட்ட நிருபணத்தின் 171 ம் அத்தியாய உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 (1) (i) ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மொஹத்தலாகே டிங்கிரி பண்டா, விவசாய, உணவு அமைச்சர் ஆகிய யான், இக்கட்டளையால் நிறம் பூசப்பட்ட நெல் தானியம் கலக்கப்பட்ட எத்தொகையான நெல்லையும் இலங்கையின் எவ்வொரு இடத்திலிருந்து இலங்கையின் மற்றொரு இடத்திற்கு உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியால் அல்லது அவர் சார்பில் முன்னர் கூறப்பட்ட இடத்தைச் சேர்ந்த பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியால் அல்லது உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியால் வழங்கப்படும் அதிகாரத்துடனும் அவ்வதிகாரத்தில் அளிக்கப்படும் நிபந்தனைகளின் பேரிலும் தவிர கொண்டு செல்லவோ அல்லது எடுத்துச் செல்லவோ கூடாதெனத் தடை விதிக்கிறேன்.

மேற்கூறப்பட்ட கட்டளை பின்வருவனவற்றிற்குப் பிரயோகிக்கப்படமாட்டாது :—

(அ) இலங்கை அரசாங்கத்தின் சார்பில் எவ்வொருவரோ எத்தொகையான நெல்லைக் கொண்டு செல்லல் அல்லது எடுத்துச் செல்லல் ;

(ஆ) பதிவு செய்யப்பட்ட நெல் ஆலை வைத்திருக்கும் ஒருவர் அல்லது அவர் சார்பில் அவரின் பண்டகசாலைக்கோ அல்லது வியாபார நிலையத்திற்கோ கமத்தொழிற் சேவை பகுதியால் அவ்வாலை வைத்திருப்பவருக்கு வழங்கப்பட்ட தொகையைக் கொண்டு செல்லல் அல்லது எடுத்துச் செல்லல்.

இக்கட்டளையால் :—

" நிறம் பூசப்பட்ட நெல் தானியம் " என்பதன் பொருள் செயற்கை முறைகளால் " மலச்சைட் பச்சை " அல்லது " கொச்சின் சிகப்பு " அல்லது வேறு எவ்விதப் பொருட்களைக் கொண்டோ நெல் தானியத்திற்கு அளிக்கப்படின் பச்சை அல்லது சிகப்பு நிறத்தைக் கொடுக்கக்கூடிய நெல் தானியத்தைக் குறிக்கும்.

" பதிவு செய்யப்பட்ட நெல் ஆலை உடையவர் " என்பதன் பொருள் தற்போதைக்குக் கமத்தொழிற் சேவை அதிகாரியால் அரசாங்கத்தின் நெல்லைப் பணத்திற்கோ, வெகுமானத்திற்கோ குற்றிக் கொடுப்பதற்கு பதிவு செய்யப்பட்ட ஒருவரைக் குறிக்கும்.

கொழும்பு,
1965 ம் ௵ ஆகஸ்ட் ௴ 9 ந் ௳.

ඇම්. ඩී. බණ්ඩා,
விவசாய, உணவு அமைச்சர்.

8-503


இலங்கை வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.